# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பரீட்சைத் திணைக்களம்

# 300 Paper Rolls வழங்கலுக்கான பெறுகை

# OCÉ CS 3500Z Inkjet Production Printer

**Contract No: 4/4/4/2018**

1. OCÉ CS 3500Z Inkjet Production Printer இற்காக 300 Paper Rolls வழங்கலுக்காக ஒரு குறைந்தபட்சம் அனுபவத்தை பெற்றிருக்கும் பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழுவினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விலைமனு ஆவணத்தில் விபரம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் OCÉ CS 3500Z Inkjet Production Printer அல்லது அதனை ஒத்த இயந்திரங்களுக்காக Paper Rolls வழங்கலில் மூன்று வருட அனுபவத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

4. 1987 இன் இலக்கம் 17 பொது ஒப்பந்த சட்டத்தின் பிரிவு 6 இற்கு ஏற்ப பொது ஒப்பந்த பதிவாளரால் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியான சான்றிதழ் ஒன்றை விலைமனுதாரர் வைத்திருத்தல் வேண்டும்.

5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பரீட்சைத் திணைக்கள 3 ஆம் மாடி வழங்கல் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 011-2786200 அல்லது 011-2785219) 23.04.2019 அன்று வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

6. 23.04.2019 அன்று பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக மீளளிக்கப்படும் கட்டணமாக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 13000/= ரூபாவைச் செலுத்திய பின்னர் வியாபார சான்றிதழின் பிரதியொன்றுடன் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை வழங்கல் பிரிவிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

7. விலைமனுவுக்கு முந்திய கூட்டம் பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்லயில் 2019.04.17 ஆம் திகதி மு.ப. 10.30க்கும் நடைபெறும்.

8. விலைமனுக்கள் அவைகள் திறக்கப்படும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு (22.08.2019 வரை) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

9. அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் செயற்படும் புகழ்பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்டதும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் விலைமனு ஆவணங்களுடன் இணைக்கப்பட்ட உருமாதிரியில் அமைந்ததாகவும் ஐந்நூறாயிரத்து அறுபதாயிரம் இலங்கை ரூபாவிற்கானதாகவும் (LKR 560,000.00) விலைமனுக்களை சமர்ப்பிக்கும் திகதியிலிருந்து 150 நாட்களுக்கு (07.08.2019 வரை) செல்லுபடியாகும் தன்மையிலும் இருத்தல் வேண்டும்.

10. விலைமனுக்கள் 2019.04.24ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல. பெலவத்த, பரீட்சைத் திணைக்களம், 03 ஆம் மாடி, வழங்கல் பிரிவில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

11. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "OCÉ CS 3500Z Inkjet Production Printer இற்காக 300 Paper Rolls வழங்கலுக்கான பெறுகை", Contract No: 4/4/4/2018 என குறிப்பிடப்படல் வேண்டும்.

12. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் விலைமனுக்கோரல் செயற்பாட்டை இல்லாதொழிப்பதற்கும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னராக எந்தவொரு வேளையிலும் அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கும் பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எவ்வித கடப்பாட்டையும் சுமத்தாமல் பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு திணைக்கள பெறுகை குழுவின் செயற்பாட்டை அறிவிக்காமல் இருப்பதற்கான எவ்வித கடப்பாட்டையும் காரணத்தையும் திணைக்கள பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,**
**பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
2019.04.03